# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்டம் - (எஸ்ஈயூடீபீ) கட்டம் 1-பீ- 2012

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கு இணங்கவும்,

(அ) செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள், அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஸ்) அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கிநடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்விற்குட்பட்ட காலத்திற்கான ஆலோசனைக் கட்டணம் (உள்நாடு) தொடர்பான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செயற்திட்டச் செலவு ரூபா 9,779,360 ஆக இருந்தது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

செயற்திட்ட காலம்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2012 மார்ச் 19 ஆந் திகதி தொடங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 செப்தெம்பர் 01 இலிருந்தே தொடங்கப்பட்டிருந்தது.

## 4. நிதிகளின் பயன்பாடு

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம், செலவுத் தலைப்பு 171 - உயர்கல்வி அமைச்சு என்பதன் கீழ் இச்செயற்திட்டத்திற்காக ரூபா 275,400,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதி ஏற்பாடு, அது தொடர்பாக இடம்பெற்ற உள்ளபடியான செலவு, நிதிகளின் குறைந்த பயன்பாடு என்பவற்றின் விபரம் கீழே தரப்படுகின்றன.

| செலவுத் தலைப்பின் விபரம் | 2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவு | குறைந்த பயன்பாடு | |
|---|---|---|---|---|
| | | | தொகை | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வெளிநாட்டு உதவி – கடன் | 13,500,000 | இல்லை | 13,500,000 | 100 |
| மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு உதவி – கடன் | 224,000,000 | 9,779,360 | 214,220,640 | 96 |
| வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதிகள் | 37,900,000 | இல்லை | 37,900,000 | 100 |
| | 275,400,000 | 9,779,360 | 265,620,640 | 96 |